
www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





## மக்கள் விரோதம் மண்ணைக் கவ்வும்

ஞானம் 07 – ஒலி 15 – 14.04.2024

# ஆசிரியர் பக்கம்



அன்புள்ள எனதருமை ஞான ஒலி இணைய இதழின் வாசக அன்பர்களே இன்று உங்கள் அனைவரையும், நம் உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்தி வணங்குகின்றேன்.

உயிர்ப்பின் முழுப் பலன்கள் அனைத்தும் உங்கள் வாழ்வை வளமாகவும், மகிழ்வாகவும் மாற்றுவதாக. அதற்காக நான் செபிக்கின்றேன்.

நமக்குக் கொடுக்கப்படும் வாக்குறுதிகள், நம்பிக்கை வார்த்தைகள் நம் வாழ்விற்கு பக்கபலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. சமீபத்தில் ஒரு பொன்மொழியைப் படித்தேன். வயதில் மூத்தவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதில் மிகவும் கவனமாக இருங்கள், ஏனென்றால், முட்டாகள்கூட முதியவர்கள் ஆவார்கள் என்று.

யார் ஞானி, யார் முட்டானி என்று அறிந்துகொள்ள முடியாது. எது எப்படி இருந்தாலும், நம் தெய்வப் புலவர் வள்ளுவப் பெருந்தகை சொன்ன, எப்பொருள யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் ஆண்பதறிவு என்று சொன்னதுதான் நமக்கு வேதமாக இருக்க வேண்டும். யார் எதைச் சொன்னாலும், யார் அறிவுறுத்தினாலும், எது நல்லது, எது சிறந்தது என்று முடிவு எடுப்பது நம் கரங்கிளில்தான் உள்ளது.

பலபேர் குப்பை லாரிகளாய்தான் இருப்பர். ஒரு இடத்திலிருக்கும் குப்பைகளை அள்ளி, வேறொரு இடத்திலிருக்கும் குப்பைத் தொட்டிகளில் கொட்டிவிட்டுச் செல்வார்கள். அவர்களுக்கு குப்பைகளை அள்ளுவதே முழுநேர வேலையாயிருக்கும். அவர்கள் புறணிமாக்கர்கள். அவர்களிடம் எல்லாரும் கவனமாயிருக்க வேண்டும். யார் எதைச் சொன்னாலும், மறுப்பின்றி, ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்கள்தான் புறணிக்காரர்களின் முதல்பலி. அவர்கள்தான் அவர்கள் தேடும் குப்பைத்தொட்டிகள். சிந்திக்கும் திறனற்ற, செக்குமாட்டுச் சிந்தனை கொண்டவர்கள் அவர்கள். அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். எல்லாவற்றையும் நம்புகின்ற அப்புராணிகளாக இருப்பது தவறல்ல, ஆனால் மீண்டும் மீண்டும் புறணிமாக்கர்கள் பயன்படுத்தும் குப்பைத் தொட்டிகளாக இருப்பதுதான் பரிதாபத்துக்கரியது, தவறு, முட்டாள்தனம்.

பறவை நம்மை அறியாமல் நம் தலைமீது கூடுகட்டுவதை தவிர்க்க முடியாமல் போகலாம், ஆனால், அதே பறவை மீண்டும் மீண்டும் நம் தலைமீது கூடு கட்டுவதை வேடிக்கை பார்ப்பதுதான் நம் முட்டாள்தனம்.

கொடுக்கப்பட்ட பயங்கரமான, பொய்களை நம்பி ஏமாந்த காலம் நமது அறியாமைக்கும், ஏமாளித்தனத்துக்கும் அடையாளமானபிறகு. நான் பொய்தான் சொன்னேன். அதை நீ நம்பியது உன் குற்றம். ஆனால் இப்போது அப்படியல்ல, உண்மையாகவே, நான் உங்களுக்கு எதெல்லாம் விரும்பினீர்களோ, அவற்றை இந்த முறை செய்வேன். ஒருமுறை மன்னித்துவிடுங்கள். உங்கள் கால்களில் விழுகின்றேன். இனிமேல் இப்படி நடக்காது. நான் உங்களுக்காகவே வாழ்கிறேன். உங்க அண்ணன் தம்பியா, உங்க வீட்டுப் பிள்ளையா இருந்தா? என்னய ஏத்துக்க மாட்டீங்களா? என்று கொஞ்சுவது, நம் ஏமாளத்தனத்தின் ஆழத்தையும், நமது நல்ல குணத்தின், எதையும் சுலபமாக மறந்து போகும் மறதியையும் அவர்கள் நம்பியிருக்கும் பேராயுதம் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

நல்லவர்கள், எளியவர்கள், எதையும் நம்புபவர்கள், சுலபமாக மன்னித்து ஏற்றுக் கொள்பவர்கள்தான், புகழ்பெற்ற, திறமைவாய்ந்த ஏமாற்றுக்காரர்களின், மொள்ள மாரி, முடிச்சவிக்கிகளின் பலியாடுகள்.

சூடு சொரணையற்ற, அற்ப ஆதாயங்களுக்காக எதையும் செய்யத் தயாராயிருக்கும் அற்பர்களே அவர்களின் ஆயுதங்கள். அவர்கள் இருக்கும் வரை ஏமாற்றும், தீயசக்திகளின் ஆட்டம் அடங்காது.

ஆனால், அப்படிப்பட்ட எளியவர்கள் விழித்துக் கொள்ளும்போது, அத்தனையும் தவிடுபொடியாகப்போய்விடும். அதுதான் அவர்கள் மூளைக்காரர்கள் என்று அறியப்படும்.

ஒருமுறை ஓநாய் ஒன்று கழுதையிடம் சென்று, நமது காட்டு ராஜா சிங்கம்,

உன்னைத்தான் இந்த காட்டுக்கு அரசனாக்கவேண்டும் என்று விரும்புகின்றது..ஆகவே அந்த சிங்கம் உன்னைப் பார்க்க அழைக்கின்றது வா போவோம் என்று கூட்டிச் சென்றது.

கழுதையைப் பார்த்த உடனே சிங்கம் பாய்ந்து வந்து கழுதையின் காதுகள் இரண்டையும் கடித்துத் தின்றுவிட்டது, அபாயத்தை உணர்ந்த கழுதை அங்கிருந்து தப்பி ஓடிவிட்டது. காது வலியோடு படுத்திருந்த கழுதையிடம் ஓநாய் மீண்டும் வந்தது. அப்போது கழுதை அடேய், ஓநாய் பயலே, இப்படிப் பண்ணிட்டியேடா, கொஞ்ச நான் சுதாரிக்கல்லனா, நான் இன்னேரம் செத்துருப்பேன், என் ரெண்டு காதுகள் போனதோடு தப்பிச்சேன் என்றது. அதற்கு ஓநாய், என்ன இப்படி முட்டாள்தனமா ஓடிவந்துட்ட, நீ ராஜாவானா, உன் தலைல ராஜ கிரீடம் வைக்க அந்தக் காதுகள் இடைஞ்சலா இருக்கும்னு, சிங்கம் அந்த இரண்டு காதுகளை கடிச்சு எடுத்துச்சு, அதப் புரிஞ்சுக்காம இப்படி வந்திட்டியே, அவசரப்பட்டுக் காரியத்தக் கெடுத்துட்டியே என்றது. அதற்கு கழுத ஓ அப்படியா சங்கதி. எனக்குத் தெரியாமப் போச்சே என்றது. மீண்டும் அந்தக் கழுத சொன்ன வாக்குறுதிகளை நம்பி, ராஜாவாகும் நப்பாசையில் சிங்கத்தைப் பாக்க போனது. இந்த சமயம், ராஜா கர்ஜித்து ஓடி வந்ததப் பாத்து கழுதை திரும்பி ஓட ஆரம்பிச்சது. இப்ப சிங்கம் கழுதையின் வாலைக் கடித்துத் தின்றுவிட்டது. கழுதை தப்பிச்சு தனது இடத்துக்கு வந்துவிட்டது.

மறுபடியும், ஓநாய் வந்தபோது, டேய் ராஸ்கோல், உன்னய நம்பவே கூடாதுடா? பித்தலாட்டக்காரா? உன்னய நம்பி வந்ததுக்கு இப்ப என் வாலும் போச்சே..என்று கோபமாகத் திட்டியது. அதற்கு ஓநாய்...ஏ..முட்டாக் கழுதையே..நீ ஓர் அவசரக் குடுக்க...நீ ராஜாவான, அரச சிம்மாசனத்துல உக்காரும்போது, உன் வாலு உனக்கு இடஞ்சலா இருக்கும்ல, அதனாலதான் சிங்கம் உன் வால கடிச்சி எடுத்துச்சு...இதக்கூட புரிஞ்சுக்க முடியத தத்தியா இருக்கியே...கடைசியா கேக்குறேன், நீ ராஜாவா ஆகணுமா? வேணாமா? அதுக்கு அந்தக் கழுத...ஆமா..ஆமா..நான் ராஜாவாகணும்....அப்ப சரி...எதுவும் பேசாமா என்கூட வா? என்று ஓநாய் கழுதைய சிங்கத்திடம் கூட்டிட்டுப் போச்சு...இந்த சமயம், சிங்கம் தாமதிக்காம, ஓரே பாய்ச்சலில் கழுதையைக் கொன்றுவிட்டது..அப்போது சிங்கம் அந்த ஓநாய்க்கிட்ட, ஏ, ஓநாய்...இந்தக் கழுதையை வெட்டி, கால் தனியா, உடம்புக் கறி தனியா, தல தனிய கொண்டுவா என்றது.

அதன்படி ஓநாய் கழுதைய துண்டு துண்டா வெட்டி கூறு கட்டியது. அப்போது ஓநாய் கழுதையின் தலையை வெட்டும்போது அதன் மூளையைச் சாப்பிட ரொம்ப ஆசப்பட்டது. அதனால, கழுதையின் மூளையை ரசிச்சு, ருசிச்சு சாப்பிட்டுவிட்டது.

ஓநாய் கொண்டு வந்த கழுதையின் கறித்துண்டுகளை ராஜா சாப்பிட்டுவிட்டு, ஓநாயிடம், ஏய் ஓநாய், கழுதையின் மூளை எங்கே என்று கேட்டது. அதற்கு அந்த ஓநாய், சிங்க ராஜாவே, இந்த கழுதைக்கு மூளையே இல்ல என்றது. அதற்கு சிங்கம் என்ன? கழுதைக்கு மூளையே இல்லையா? என்று கத்தியது. அதற்கு ஓநாய்..ஆமா ராஜா...நீங்கதான் இந்தக் காட்டுக்கு இப்போதுமட்டுமல்ல, எப்போதும் ராஜா...நீங்கதான் அந்தக் கழுதைய நீங்க ராஜாவாக்கப்போறீங்க என்று நான் சொன்ன பெரிய பொய்ய நம்பி உங்ககிட்ட வந்துச்சு, மொத முறை நீங்க காதக் கடிச்சீங்க. ரெண்டாவது தடவ, அதன் வாலக் கடிச்சீங்க...இப்படி மூணுதடவயும் நான் சொன்ன பொய்களை நம்பி உங்ககிட்ட வந்து செத்துப்போச்சு...அதுக்கு மூளை இருந்திருச்சின்னா, இப்படி இந்தப் பொய்களை நம்பி இருக்குமா? இப்டி வந்து செத்திருக்குமா? என்று கேட்டதாம்.

மொதத் தடவ பொய்யானவர்களிடம் மாட்டி ஏமாந்து போனத ஏத்துக்கலாம். ஆனா, ரெண்டாவது தடவ ஏமாந்துபோய், முழிபுதிங்கி சின்னாபின்னமானது கடைந்தெடுத்த ஏமாளித்தனம் என்பது உண்மை. ஆனால், மூன்றாவது தவட...ஓநாய் வந்து...சொல்லும் பொய்யை நம்பி...மூணாவது தடவையும் எமாந்தா, அந்தக் கழுதையைப்போல், நமக்கும் மூளை இல்லை என்பது உண்மையாகிவிடும்.

ஏமாற்றுபவர்களை நாம் குறைசொல்ல முடியாது. அவர்கள் ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர்கள். ஏமாறுகிறவர்கள் இருக்கும்வரை, எழும்புத் துண்டுக்கும், பதவிகளுக்கும், பணத்துக்கும் அலைபவர்கள், எதற்கும் விலைபோகும் கைக்கூலிகள் இருக்கும்வரை எமாற்றுபவர்களின் காட்டில் மழைக்குப் பஞ்சமிருக்காது.

ஏமாற்றுபவர்களுக்கு வெட்கமே இருக்காது. மானம் கிடையாது. அவர்கள் தரம் தாழ்ந்தவர்கள்.

ஆனால், ஏமாறுபவர்கள் எப்போதும் ஏமாறமாட்டார்கள். ஒருவரின் முகத்தில் ஒருமுறை கரிபூசிவிடலாம். அது அவர்களின் கரங்கள் விரல்கள் கரும்புள்ளியால், களங்கப்படலாம். ஆனால், தனிமனித, ஒற்றை விரலின் வலிமை இணையற்றது. தீமையை தவிடுபொடியாக்கிவிடும்.

தனிமனிதகளின் விழிப்புகள், விடியலாக மாறிவிடும். ஒற்றை விழிப்பு, பரந்து விரிந்து மற்றவரில் விளக்கேற்றும். இருள் ஓடி மறையும்.



# விவிலியம் அறிவோம்




## யோர்தான் ஆற்றைக் கடத்தல்

இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைவதற்காக மோவாபு சமவெளியில் காத்திருக்கின்றனர். உளவு பார்ப்பதற்காக யோசுவா அனுப்பிய ஒற்றர்கள் திரும்பிவந்து நாட்டைப் பற்றிய செய்திகளை யோசுவாவிடம் அறிவித்துவிட்டனர். இனி அவர்கள் யோர்தான் ஆற்றைக் கடக்கவேண்டும். அதற்காக மக்களைத் தயாரிக்கும் பணிகள் நடைபெறுகின்றன. நாட்டை உளவுபார்க்கச் சென்ற ஒற்றர்கள் யோர்தான் ஆற்றை எளிதில் கடந்துவிட்டனர். ஆனால் பெண்கள், குழந்தைகள் மற்றும் கால்நடைகளையும் பொருள்களையும் கொண்ட இஸ்ரயேல் மக்கள் கூட்டம் கரைபுரண்டோடும் யோர்தான் ஆற்றைக் கடப்பது அவ்வளவு எளிதல்ல. ஆண்டவரின் உதவியில் நம்பிக்கைவைத்து யோசுவா மக்களை வழிநடத்துகிறார். யோசுவாவால் அனுப்பப்பட்ட மேற்பார்வையாளர்கள் பாளையமெங்கும் சென்று மக்களுக்குச் சில அறிவுரைகளை வழங்குகின்றனர். முதலாவது, குருக்கள் உடன்படிக்கைப் பேழையைத் தூக்குவதைப் பார்க்கும்போதுதான் அவர்கள் புறப்படவேண்டும். இரண்டாவது, உடன்படிக்கைப் பேழைக்கு அருகில் யாரும் செல்லக்கூடாது. உடன்படிக்கைப் பேழைக்கும் மக்களுக்கும் இடையில் இரண்டாயிரம் அடி தூரம் இடைவெளி இருக்கவேண்டும். மூன்றாவது, மக்கள் முதல் முதலாக இந்த வழியில் செல்வதால் உடன்படிக்கைப் பேழையைப் பின்பற்றியே செல்ல வேண்டும். இறுதியாக, அவர்களைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தூய்மையாக இருப்பதற்கு அவர்கள் இரண்டு காரியங்களைச் செய்யவேண்டும். முதலாவது, துணிகளைத் துவைத்துக் குளிக்க வேண்டும். இரண்டாவது, பாலியல் உறவுகளைத் தவிர்க்க வேண்டும். ஆண்டவருடைய பிரசன்னம் உடன்படிக்கைப் பேழையின் வழியாக அவர்கள் முன் செல்கிறது. எனவே அனைவரும் தூய்மையுடன் ஆண்டவரைப் பின்செல்வது அவசியம்.

உடன்படிக்கைப் பேழையை லேவியர் குருக்கள் சுமந்து செல்லப் பணிக்கப்படுகின்றனர். யோசுவா 3:12 இல் இஸ்ரயேலின் பன்னிரு குலங்களிலிருந்தும் ஒருவர்வீதம் பன்னிருவர் தேர்ந்தெடுக்கப்படுவதாக வாசிக்கிறோம். இவர்கள் எதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது கூறப்படவில்லை. இவர்கள்தான் முதலில் உடன்படிக்கைப் பேழையைச் சுமந்து செல்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கலாம். குருக்கள் உடன்படிக்கைப் பேழையைச் சுமந்து செல்வதாக பிற்காலத்தில் நூலைத் தொகுத்தவர்கள் மாற்றங்கள் செய்திருக்கலாம் என ஒரு சில அறிஞர்கள் கருதுகின்றனர். வேறுவிதத்தில் பார்த்தால் இஸ்ரயேல் மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிருவரும் உடன்படிக்கைப் பேழைக்கு அருகில் நடந்துவருவதற்காகவும், ஆண்டவர்

புரிகின்ற வியப்புக்குரிய செயல்களை இஸ்ரயேல் மக்களின் பிரதிநிதிகளாகக் காண்பதற்காகவும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் கருத இடமிருக்கிறது. இந்தப் பன்னிருவரும் வேறு ஒரு முக்கியமான செயலைச் செய்வதற்கும் பணிக்கப்படுகிறார்கள். யோர்தான் ஆறு பிரிந்து மக்கள் உலர்ந்த தரையில் நடந்துசென்றபின் உடன்படிக்கைப் பேழையைச் சுமந்து நின்ற குருக்கள் நின்ற இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த பன்னிருவரும் பன்னிருகற்களைச் சுமந்துவர யோசுவா அவர்களுக்குக் கட்டளையிடுகிறார். அவர்கள் சுமந்து வருகின்ற கற்கள் யோர்தான் ஆற்றை மக்கள் கடந்து சென்றபின் ஒரு நினைவுக் குவியலாக வைக்கப்படும். அவர்களும் பன்னிரு கற்களைச் சுமந்து வருகிறார்கள். அந்தக் கற்களைக் கொண்டு யோசுவா ஒரு நினைவுக் குவியலை எழுப்புகிறார். யோசுவா மூன்றாவது பிரிவில் வருகின்ற செய்திகள் பல மரபுகளிலிருந்து வருகின்றன. அவற்றைப் பிரித்து எந்தச் செய்திகள் உண்மையான செய்திகள், எந்தச் செய்திகள் இணைக்கப்பட்ட செய்திகள் என்று கண்டுகொள்வது மிகவும் கடினம்.

யோர்தான் ஆற்றைக் கடப்பதற்காகச் செய்யப்படும் தயாரிப்புகள் அனைத்து ஒரு வழிபாடுபோல் தெரிகிறது. யோர்தான் ஆற்றைக் கடத்தல் நினைவான ஒரு வழிபாடாக இது நடத்தப்பட்டிருக்கலாம் என பல அறிஞர்களும் கருதுகின்றனர். இப்பகுதியை எழுதிய ஆசிரியர் வழிபாடாக நடத்தப்பட்டு வந்த இந்தக் கதையை யோசுவா நூலின் மூன்றாவது பிரிவைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தி இருக்கலாம். வாழும் கடவுளாகிய ஆண்டவர்தான் இஸ்ரயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் கொண்டு செல்வதற்குக் காரணமானவர் என்பதைக் கூறுவதுதான் அவரது நோக்கமாக இருக்கிறது. இப்பிரிவில் வருகின்ற ஒரு சிறப்புக் கருத்து என்னவென்றால் ஆண்டவர் வல்லமைவாய்ந்தவர் என்பதாகும். இஸ்ரயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் அவர் கூட்டிவந்ததுபோல நாடுகடத்தப்பட்டு அகதிகளாக வாழும் மக்களையும் கூட்டிவருவார் என்பதை இப்பிரிவு கூறுவதுபோல் உள்ளது. யோசுவா 3:2-6 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் ஆண்டவர்தான் மக்களை வழிநடத்துகிறார் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றன. உடன்படிக்கைப் பேழை ஆண்டவருடைய பிரசன்னத்தின் அடையாளம்; எனவே உடன்படிக்கைப் பேழை மக்கள்முன் செல்வது ஆண்டவர் மக்களை வழிநடத்திச் செல்வதைக் காட்டுகிறது. உடன்படிக்கைப் பேழைக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி மக்கள் ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் குறிப்பதாக உள்ளது. ஆண்டவரின் வழிநடத்துதலில் மக்கள் செல்வதற்கு அவர்கள் தூய்மையாக இருக்க வேண்டும். மேலும் ஆண்டவர் வியத்தகு செயல்களைச் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார். எனவே மக்கள் தூய்மையுள்ளவர்களாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இறைச்சொற்றொடர் ஏழு கடவுள் செய்யப்போகும் வியத்தகு செயல்களின் நோக்கம் என்னவென்பதை எடுத்துரைக்கிறது. யோசுவாவை மக்கள் முன்னிலையில் பெருமைப்படுத்த வேண்டும். யோசுவா மோசேயின் வாரிசாக, மக்களின் தலைவராக இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். கடவுள் செய்யப்போகும் வியத்தகு செயல்கள் ஆண்டவர் மோசேயுடன் இருந்ததுபோல யோசுவாவுடனும் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும். யோசுவா 3:10-13 வரையுள்ள சொற்றொடர்களில் வருகின்ற யோசுவாவின் உரை நடக்க இருக்கின்ற செயல்களுக்கு வாழும் கடவுளான ஆண்டவரே காரணம் என்பதை வெளிப்படுத்தும். மக்கள் யோர்தான் ஆற்றைக் கடந்து செல்லும்படி ஆண்டவரே

தண்ணிரை நிறுத்துவார்.

யோசுவா கூறியதுபோல அனைத்தும் நடக்கிறது. ஒரு சிறப்புப் பவனியைப்போல உடன்படிக்கைப் பேழையைச் சுமந்து செல்லும் குருக்களைப் பின்பற்றி மக்கள் செல்கிறார்கள். உடன்படிக்கைப் பேழையைத் தூக்கி வருகின்ற குருக்களின் பாதங்கள் யோர்தான் ஆற்றைத் தொட்டதும் தண்ணீர் பிரிந்து மேற்பகுதியிலிருந்து ஓடிவந்த தண்ணீர் ஒரு குவியலாக நின்றது. மக்கள் ஆற்றைக் கடந்து செல்கிறார்கள். எகிப்திலிருந்து புறப்பட்டபோது மக்கள் செங்கடலைக் கடந்து வந்ததற்கு இணையாக யோர்தான் ஆற்றைக் கடக்கும் நிகழ்வும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வு மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழையச் செய்கிறது; இஸ்ரயேல் மக்கள் யோர்தான் ஆற்றைக் கடக்கும் நிகழ்வு ஆண்டவருடைய வல்ல செயல்களில் ஒன்றாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆண்டவரின்; வல்ல செயல்கள் அனைத்தும் விடுதலைப் பயணம் என்னும் கண்ணாடி வழியாகப் பார்க்கப்படுகிறது. இந்நூலில் பதிவு செய்யப்பட்டவை அனைத்தும் நாடுகடத்தப்பட்டு பாபிலோனில் அகதிகளாக வாழும் மக்களை மையமாக வைத்து பதிவுசெய்யப்பட்டுள்ளதால் நாடு கடத்தப்பட்டு அகதிகளாக வாழும் மக்கள் திரும்பி வருவது ஒரு புதிய விடுதலைப் பயணமாகச் சித்தரிக்கப்படுகிறது. மக்கள் அனைவரும் யோர்தான் ஆற்றைக் கடந்து கில்கால் என்ற இடத்தில் இரவு தங்குகின்றனர். பன்னிரு குலங்களின் பிரதிநிதிகளும் யோர்தான் ஆற்றிலிருந்து எடுத்த பன்னிரு கற்களையும் ஒரு நினைவுக் குவியலாக கில்காலில் வைக்கின்றனர்.

யோசுவா 4:1-9 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் ஒரு பிற்சேர்க்கையாகத் தெரிகிறது. இப்பிரிவின் 10 வது சொற்றொடர் யோசுவா 3:17 இன் தொடர்ச்சியாகத் தெரிகிறது. யோசுவா 3:17 இல் உடன்படிக்கைப் பேழையைச் சுமந்துவந்த குருக்கள் யோர்தான் ஆற்றின் நடுவில் வறண்ட தரையில் நிற்கின்றனர். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் வறண்ட தரைவழியாக நடந்து யோர்தானைக் கடக்கின்றனர். யோசுவா 4:10-11 இல் அனைத்து இஸ்ரயேல் மக்களும் யோர்தானைக் கடக்கும்வரை உடன்படிக்கைப் பேழையைச் சுமந்த குருக்கள் அங்கேயே நிற்கின்றனர்; மக்கள் அனைவரும் யோர்தானைக் கடந்துசென்றபின் குருக்களும் உடன்படிக்கைப் பேழையுடன் யோர்தானைக் கடந்து வருகின்றனர். அவர்கள் தங்கிய இடத்தில் யோர்தான் ஆற்றிலிருந்து எடுத்துவரப்பட்ட கற்கள் நினைவுக் குவியலாக வைக்கப்படுகின்றன. நினைவுக் குவியலைப்பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர், இவை உங்களிடையே ஓர் அடையாளமாக இருக்கும். இக்கற்கள் உங்களுக்கு எதைக் குறிக்கும் என்று பிற்காலத்தில் உங்கள் பிள்ளைகள் கேட்பார்கள். அப்பொழுது நீங்கள் அவர்களுக்கு இவ்வாறு சொல்லுங்கள்; யோர்தான் நீர் ஆண்டவரது உடன்படிக்கைப் பேழையின்முன் பிரிந்து நின்றது. அப்பேழை யோர்தானைக் கடக்கும்பொழுது யோர்தானின் தண்ணீர் பிரிந்து நின்றது. இக்கற்கள் இஸ்ரயேல் மக்களுக்கு என்றும் இந்நிகழ்ச்சியை நினைவூட்டுவதற்காக உள்ளன என்று சொல்லுங்கள் எனப் பதிவுசெய்கிறார். இப்பகுதியில் இரண்டு மரபுகள் வருகின்றன. ஒரு மரபிலிருந்து வரக்கூடிய செய்திகள் இஸ்ரயேல் மக்கள் யோர்தான் ஆற்றைக் கடந்தபின் தங்கிய இடத்தில் வைக்கப்பட்ட கற்குவியலின் காரணக்கதையாக உள்ளது (4:1-8); இரண்டாவது மரபிலிருந்து வருகின்ற செய்திகள் உடன்படிக்கைப்

பேழையை சுமந்துநின்ற குருக்கள் நின்ற இடத்தில் வைக்கப்பட்ட கற்குவியலின் காரணக்கதையாக உள்ளது (4:9).

யோசுவா 4:1-9 வரையுள்ள பிற்சேர்க்கையின் நோக்கம் என்னவென்றால் ஆண்டவரே இஸ்ரயேல் மக்களை யோர்தான் ஆற்றைக் கடந்துவரச் செய்தார் எனக் கூறுவதாகும். நாடு கடத்தப்பட்டு அகதிகளாக வாழுகின்ற மக்களுக்கு இது நம்பிக்கை தருகின்ற செய்தியாகும். யோர்தான் ஆற்றைக் கடப்பதற்கு மக்களுக்கு உதவிய கடவுள் அகதிகளாக வாழும் தங்களையும் மீட்டு மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவார் என்ற செய்தியைக் கூறுவதாக உள்ளது. யோசுவா 4:10-18 வரையுள்ள சொற்றொடர்கள் யோர்தான் ஆற்றிற்குக் கிழக்கே குடியமர்த்தப்பட்ட குலங்களும் ஏனைய குலங்களுக்கு உதவும் வண்ணம் இணைந்து சென்றனர் எனக் கூறுகின்றன. வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரயேலின் எல்லாக் குலங்களும் இணைந்து செயல்பட்டனர் என்ற செய்தி இதன் வழியாகக் கூறப்படுகிறது. யோசுவாவைப் பெருமைப்படுத்தவே ஆண்டவர் அனைத்தையும் செய்ததாக மீண்டும் கூறப்படுகிறது. ஆற்றைக் கடக்கும் வல்ல செயலின் வழியாக அந்த நோக்கம் நிறைவேறுகிறது. மக்கள் மோசேயின் சொற்களுக்குச் செவிகொடுத்து அவர் காட்டிய வழியில் நடந்ததுபோல யோசுவாவுக்கும் செவிகொடுத்து அவர் காட்டும் வழியில் நடக்கின்றனர். மக்கள் அனைவரும் ஆற்றைக் கடந்தபின் குருக்களும் தங்கள் நின்ற இடத்திலிருந்து கடந்து வருகின்றனர். அதுவரைப் பிரிந்துநின்ற யோர்தான் இணைகிறது. மீண்டும் வழக்கம்போல் கரைபுரண்டு ஓடுகிறது.

பயணம் தொடரும்,

அருட்பணி முனைவர் ஆ. அலெக்ஸ்.cmf.



# ஞாயிறு மறையுரை






அருட்பணி.ஸ்டீபன் கஸ்பார் ராஜ்
பங்குத்தந்தை
புனித.சகாய அன்னை ஆலயம்
சின்னாளபட்டி
திண்டுக்கல் மறைமாவட்டம்


**பாஸ்கா 3ம் ஞாயிறு**
**14.04.2024**

**திருப்பலி வாசகங்கள்**
திருத்தூதர் பணிகள் 3/13-15, 17-19
1 யோவான் 2/1-5
லூக்கா 24/35-48

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே கல்வாரிக் கொடுமைகளுக்குப்பின், சீடர்களின் வாழ்நிலை அச்சமும், விரக்தியும் நிறைந்ததாகவே இருந்தது. தங்களின் கனவுகளும், எதிர்பார்ப்புகளும் பொய்த்துப் போனதாக எண்ணிக் கதவுளை மூடித் தங்களைப் பூட்டி வைத்துக்கொண்டனர். இந்நிலையில்தான் உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்கு வெவ்வேறு இடங்களில் தோன்றி காட்சி தருகிறார். இன்றைய மூன்றாம் வாரம் தமது பாடுகள், மரணம், உயிர்ப்பிற்குப் பிறகு, நீங்களே என் சாட்சிகள், எனக் கூறித் தம் சீடர்களின் மனக்கண்களைத் திறக்கிறார். சீடர்கள் அவரைக் கண்டு ஆவியைப் பார்ப்பதுபோல எண்ணி அச்சத்தால் மூழ்குகிறார்கள். காரணம் அவரின் உயிர்ப்பை இன்னும் நம்பவில்லை. அவர்களால் அதைப் புரியவும் முடியவில்லை.

இன்றைய நற்செய்தியில் இயேசு தாம் உயிர்த்ததைச் சீடர்கள் உறுதிப்பட நம்பவும், உயிர்ப்புக்கு சாட்சிகளாக மாறவும் பல வழிமுறைகளைப் பொறுமையோடும், இரக்கத்தோடும் கையாளுகிறார். தன் தந்தையின் மகிமையில் பங்கு கொண்ட ஆண்டவர் இயேசு தம் சீடர்களைவிட்டு அகலவில்லை. உண்மையிலே அவர்களோடு இருந்து பழகிய அதே இயேசுதான், தான் என்பதையும், இப்போது மாட்சிபெற்ற உடலோடு இருப்பதையும் காட்டுகிறார். இயேசுவின் இந்தக் காட்சி அவர்களை மகிழ்ச்சிக்கும், வியப்பிற்கும் உள்ளாக்குகிறது. இதையே இன்றைய நற்செய்தி 24/4ல் சீடர்களோ, நம்ப முடியாதவர்களாய் வியப்பிற்கு உள்ளாகி இருந்தனர் என்கிறார். தான் ஆவியல்ல, என்பதைக்காட்ட அவர்களோடு உணவு உட்கொண்டு தன் உடனிருப்பை உயிர்ப்பைக் காட்டுகிறார். எம்மாவுஸ் நிகழ்விலும் இன்றைக் காட்சியிலும் உறுதிப்படுத்துகிறார் இயேசு. உண்பதற்கு இங்கே உங்களிடம் ஏதேனும் உண்டா? (லூக் 24/41) எனக் கேட்கிறார்.

இயேசு அவர்களோடு உணவு அருந்தித் தன்னை தன் உடனிருப்பை அடிடயாளம் காட்டுகிறார். அனைவரின் மனக்கண்களையும் திறந்துவிடுகிறார். நம்பிக்கையில் அவர்களை ஆழப்படுத்தி, மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பப்படவேண்டும், பாவ மன்னிப்புப் பெற மனமாற்றம் பெறவேண்டும். இந்தச்செய்தி எருசலேம் தொடங்கி எல்லா நாடுகளுக்கும் அவர் பெயரால் அறிவிக்கப்படல் வேண்டும் என்ற முக்கியமான படிப்பினைகளை இன்றைய நற்செய்தி வழியாய் இயேசு முன் வைப்பதை லூக்கா நற்செய்தியின்

இன்றைய கடைசிப் பகுதியில் பார்க்க முடிகிறது.

மன்னிப்புப் பெற்று பாவத்திலிருந்து காக்கப்பட மனம் மாறவேண்டுமென்ற செய்தி சீடர்களால் பறைசாற்றப்படுகிறது. மனமாற்றம் நம்மை நற்செய்ல்கள் செய்ய அழைத்துச் செல்ல வேண்டுமென இன்றைய இறை வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. தீச்செயல்களை அறிக்கை இடுவதே நற்செயல்களின் தொடக்கம் என புனித.அகுஸ்தீன் சொல்கிறார்.

தீச்செயல்களை ஆதரித்து நற்செயல்களைப் புறக்கணித்து வாழ்பவரால் உயிர்த்த கிறிஸ்துவின் சாடசியாய் வாழ முடியாது. இன்றைய முதல் வாசகத்தில் புனித.பேதுரு நீங்கள் வாழ்வுக்கு ஊற்றானவரைக் கொன்று போட்டீர்கள். ஆனால், கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார் எனத் துணிவோடு எடுத்துரைத்து சாட்சியம் பகருகிறார். உண்மையைத் தன் போதனையால் மக்களை உணர வைப்பதைக் கேட்டோம்.

அன்பான இறைச் சமூகமே, பாவம்தான் நம் இறை உறவிற்கு எதிரி என இன்றைய 2ம் வாசகம் கூறுகிறது. இயேசுவே நம்முடைய பாவங்களுக்குக் கழுவாய் ஆகிறார். இயேசுவே பலியாகி நம் பாவங்களைப் போக்குகிறார். இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் அவர் வாழ்ந்தவாரே வாழவேண்டும். அவ்வாறு வாழாதவர்கள் அவரை உண்மையில் அறியவில்லை என்ற சிந்தனையை இன்றைய 2ம் வாசகம் சொல்லித் தருகிறது.

அன்பானவர்களே கிறிஸ்தவ மனமாற்றம் என்பது, ஆண்வரது அளவுகடந்த அன்பால் கவரப்படுவதும், மற்றும் உள் மனத்தின் ஆழத்தில் பாவத்தை வெறுப்பதுமாகும். புனித.மரிய கொரற்றி கூறுவார், பாவம் செய்வதைவிட சாவதுமேல் என்று. உலக மாந்தர், நாட்டை ஆள்வோர், சமய, ஆன்மீக வழிகாட்டிகள், அரசியல்வாதிகள் என எல்லாருமே இன்று உலக மாயைக்கும், பெயருக்கும், பொன்னுக்கும், பொருளுக்கும் அடிமைகளாகிப் பாவத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர் என்பதை எல்லாரும் அறிவோம்.

அன்பானவர்களே, உண்மையான மனமாற்றம் என்பது தீய வாழ்வைவிட்டு விடுவது மட்டுமல்ல, முழுமையான நற்செயல்களில் ஈடுபடுவதாகும். நற்செயல்களுக்கு நம்மை இட்டுச் செல்லுவதே உண்மையான மனமாற்றமாகும். இத்தகைய மனமாற்றத்தை உனக்கும், எனக்கும் தருபவர் உயிர்த்த கிறிஸ்துவே.

சீடர்களுக்கு, மனம் மாறிட, பாவ மன்னிப்புப்பெற மனம் மாறுங்கள் எனக்கூறி உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றி சாட்சிகளாக மாற கட்டளையை இயேசு கொடுத்தார். சீடர்கள் இயேசுவுக்காக வாழவும், அவருக்காகத் துன்புறவும், இறக்கவும், ஏன்? மறைசாட்சியாகவும் உருமாறினார்கள். சாட்சியம் பகர்ந்தார்கள். உண்மையான மறைசாட்சியம் இயேசு கிறிஸ்துவை அறிவதும், அன்பு செய்வதும் அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதுமாகும்.

அன்பானவர்களே, நாமும் அவரின் பாடுகளுக்கும், மரணத்திற்கும் உயிர்ப்பிற்கும் சாட்சிகளாக மாற, பாவத்தை நம்மில் விலக்கி, மனமாறி, நற்செய்தியை நம்புவோம், அறிவோம், அனுபவிப்போம், அறிவிப்போம் என்ற மனத்துணிவோடு, இயேசுவின் சீடனாய், சீடத்தியாய், சாட்சியாய் மாறிட தீமையை விலக்கி, அவரைப்போல் நன்மை செய்வோம் என் உறுதிப்பாட்டை இப்பலியில் வரமாய்க் கேட்போம். ஆமென்.



# பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு

தி.ப. 3 : 13–15, 17–19, 1 யோவா. 2 : 1–5, லூக். 24 : 35–48

**14-04-2024**



**பா. சேவியர்**
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

மாசற்ற இயேசுக் கிறிஸ்துவின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவரோடு இணைந்து வாழ வேண்டும் என்ற சிந்தையோடு வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

சாவை வென்று உயிர்த்த இறைமகன் இயேசு இன்றைய வழிபாட்டின் வழியாக நமக்கு சமாதானத்தை வழங்கக் காத்திருக்கிறார்.

பாவம் செய்திடினும் அதிலிருந்து மனம் மாறி, கடவுளை நோக்கித் திரும்பி வர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் இன்றைய வாசகங்கள் அமைதிக்கான வழியைக் கண்டுணர நம்மை அழைக்கின்றன.

சமுதாயத்திற்கு ஒரு கேடாக விளங்கிய சக்கேயுவை மன்னித்த கடவுள், ஒழுக்கமின்றி வாழ்ந்த சமாரியப் பெண்ணை மன்னித்துத் திருத்திய இறைவன், பாவியான பெண்ணை மன்னித்த பரமன், தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களைக்கூட மன்னித்த மாதவன் இத்திருப்பலி வழியாகத் தம் தந்தையிடம் நமக்காகப் பரிந்து பேசி, நம் பாவங்களை மன்னித்து, நம்மை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்.

சீடர்களுக்கு மகிழ்ச்சியையும் மனத்துணிவையும் மனமாற்றத்தையும் அளித்த உயிர்த்த இறைமகன் இயேசுவின் அன்பின் பிரசன்னமும் சமாதானமும் இன்று இத்திருப்பலியில் பங்கு பெறும் நமக்கும் கிடைக்கிறது. உயிர்த்த இயேசு வழங்கும் சமாதானம் நம்மில் நிலைபெற இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

சிலுவையில் மரித்த இயேசு உயிர்த்து வந்து மீண்டும் நம்முடன் வாழ்கின்றார். அவர் என்றும் வாழும் கடவுள் என்று இன்றைய முதல் வாசகத்தின் வழியே உயிர்த்த இயேசுவுக்கு சான்று பகர்கின்றார் தூய பேதுரு. நம் பாவங்கள் மன்னிக்கப்படும் பொருட்டு, மனம் மாறி கடவுளிடம் திரும்புங்கள் என்று அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆண்டவருடைய கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கத் தொடங்கும்போதுதான் நாம் அவரை முழுமையாக அறிய முடியும் என்பதை புனித யோவான் இவ்வாசகத்தின் வழியே வலுவாக எடுத்துரைக்கின்றார். கடவுளது வார்த்தைகளைப் பின்பற்றி நடப்பவரிடம் கடவுளது அன்பு நிறைவடைகிறது என்பதை எடுத்துக் கூறும் இவ்வாசகத்தைக் கவன முடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்


1) வாழ்வுக்கு ஊற்றான இறைவா, உம் திருஅவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் மன உறுதியோடும் நீதியோடும் சமாதானத்தின் தூதர்களாக செயல்பட்டு மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து மனமாற்றத்திற்கு தயார்படுத்த அவர்களுக்குத் தேவையான ஆற்றலையும் ஆரோக்கியத் தையும் தந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) சமாதானத்தின் ஊற்றான இறைவா, எம்மாவுஸ் சீடர் களைப்போல நாங்களும் மனமாற்றம் அடைந்து, உம்மிடம் திரும்பி வந்து, பாவ மன்னிப்புப் பெற்று, நற்செயல்கள் புரிந்து உம் திருமகன் இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகரும் மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) ஆற்றலின் ஊற்றே இறைவா, எங்களை ஆளும் அரசியல் தலை வர்கள் மற்றும் அதிகாரிகளுக்காக உம்மை மன்றாடுகிறோம். அவர்கள் தங்களது பொறுப்பை உணர்ந்து, நாட்டு நலனிலும், மக்கள் நல வாழ் விலும் அக்கரைகொண்டு செயல்பட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) உண்மையின் ஊற்றே இறைவா, துன்பங்கள் மற்றும் சோதனைக ளின்போது எங்களுக்கு ஊக்கத்தை யும் உற்சாகத்தையும் தருவது உம் திருமகன் இயேசுவின் உயிர்ப்புதான் என்பதை முழுமையாக உணர்ந்து, உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்று, எங்களது சொல்லாலும் செய லாலும் சிந்தனையாலும் உயிர்ப்பின் புகழ் பாடும் சாட்சிகளாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



பாடப் பாட ராகம்
மூட மூட ரோகம்

தனக்கே கீழ்படியாதவன் யாரையும் வழிநடத்த முடியாது
– பிரடெரிக் நீட்சே

கற்றுக்கொண்டே இருப்பவர்கள்
வாழ்வில் உயர்ந்துகொண்டே இருப்பார்கள் – சார்லஸ் முங்கர்

விட்டுவிலகாதீர்கள், கடுமையான போர்
வலிமையான வீரர்களுக்கே கொடுக்கப்படும்.

எல்லாச் சூழலிலும் அமைதியாயிருக்க
உங்கள் மூளைக்கு பயிற்சி கொடுங்கள்

எதைச் சொன்னாலும் எளியோரின் எளிமைதான்
பொய்யர்களின் ஆயுதம். – ஸ்டீபன் கிங்

உங்களை நேரடியாக எதிர்க்கும் தைரியம் இல்லாதவர்கள்
பயன்படுத்தும் ஒரே ஆயுதம், உங்களைப் பற்றிய வதந்திகள்.

உண்மையான அன்புக்கு பரிசுப் பொருட்களைவிட
உண்மைத்தன்மை, நேர்மை, நம்பகத்தன்மையே தேவை.

உங்களைப்பற்றிய பிறரின் அபிப்ராயங்கள்
அவர்களின் அனுமானங்கள். அது அவர்களின் பிரச்னை
உங்களுக்கு எந்தவித பங்குமில்லை, பாதிப்புமில்லை
– ஜீன் பால் சார்ட்

ஒரு ஜாதி தாழ்ந்தது எவ்வளவு பொய்யோ
அவ்வளவு பொய் இன்னொரு ஜாதி உயர்ந்தது என்பதும்.
– ஜெயகாந்தன்

மற்றவரை விட, நம்மைக் கட்டுப்படுத்துவது சிறந்தது. – வெரோன் ஹோவர்ட்

# தமிழே..அமுதே..எனதுயிரே





பழந்தமிழ் புலவர் பெருமக்கள் அறிவுக்களஞ்சியமாகவும், ஆன்றமைந்த ஒழுக்கமுடையவராகவும், பாவன்மையோடு, நாவன்மை படைத்தவராகவும், அஞ்சா நெஞ்சம் உடையவராகவும் பொது நலத்தொண்டே தம் பிறப்பின் பயனெனக் கொண்டவராகவும், தன்னலம் என்பதை கனவிலும் கருதாதவராகவும், தமிழ் மொழி வளர்ச்சியிலும், தமிழர் முன்னேற்றத்திலும் அளவு கடந்த அக்கறையும், ஆர்வமும் உடையவராகவும் இருந்தனர்.

அன்பு, அருள், அடக்கம், பொறை, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, தூய்மை, நடுவு நிலைமை முதலிய அரும்பெரும் குணங்கட்கு இருப்பிடமாக திகழ்ந்தனர். இத்தகைய சால்புடமை பற்றியே அவர்கள் சான்றோர் எனப்பட்டனர். அச்சான்றோர் இல்லாத ஊர் குடியிருத்தற்கு தகுதியுடையதன்று என அக்காலத் தமிழ் மக்கள் கருதி வந்தனர்.

ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே என பெருமையாகக் கூறிக்கொள்கிறார் பிசிராந்தையர் என்னும் சான்றோர். (கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கும் செய்தியறிந்து அவரைக் காண பிசிராந்தையார் என்ற புலவர் பெருந்தகை செல்கின்றார். அவரைக் கண்ட சான்றோர் அவரை நோக்கி ஆண்டுகள் பலவாகியும் உமக்கு நரையில்லையே. உமக்கு இஃது எவ்வாறு வாய்த்தது என வினவினர். அதற்கு அவர் சான்றோர் பலர் வாழும் ஊர் என்னுடைய ஊர். அதனால் அவருடன் பழகி மகிழ்ச்சியாக இருக்கிறேன். அம்மகிழ்ச்சிப் பெருக்கால் நரையின்றி இளமையுடன் இருக்கிறேன் என்கிறார்)

சான்றோர் வாழும் ஊர்க்கே சான்றோர் தேவையெனின் சாலார் (அறிவு ஒழுக்கமின்மையான – அமைதி இல்லாதவர்) வாழும் ஊர்க்குச் சான்றோர் தேவையைச் சொல்லவா வேண்டும்? அத்தகு பெருமை உடையவர் அன்னார்.

புலவர் பெருமக்கள் ஒருவருடைய நல்ல குணங்களையும், கெட்ட குணங்களையும் நாடறிய செய்து நன்மை கடைபிடித்து நடப்பதில் ஆர்வமும், அக்கறையும் கொள்ளும்படி தமிழ் மக்களை தூண்டி வந்தனர். நல்லது செய்யாவிட்டாலும் கெட்டது செய்யாதீர் என்பது அப்புலவர் பெருமக்களின் பொன்மொழி.


ஒருவர் செய்த கொடுமையைக் கொஞ்சமும் கூசாது கூறி தமிழ் மக்கள் கொடுஞ்செயல் செய்தற்கு அஞ்சியாகலும்படி செய்து வந்தனர். நன்னன் என்னும் தமிழ்ச்செல்வன் பெரும் கொடையாளன். அவ்வாறாக இருந்தும் இரக்கமின்றி ஓர் இளம் பெண்ணை கொலை செய்த கொடுமைக்காக, பெண் கொலை புரிந்த நன்னன் என அக்கொடுஞ்செயலை நாடறிய செய்தமை இதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

மீண்டும் மலரும்.

லீமா விக்டோரியா, தமிழ் ஆசிரியை.




# சாதிக்கப் பிறந்த மனமே உயிர்த்தெழு



அனைவருக்கும் வணக்கம்

சிறுவர்களும்இ, இளைஞர்களும் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்போடு செயலாற்றுகின்றனர். அப்படி சாதித்த பிறகு அது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத்தரும், புகழைத்தரும், பெருமையைத்தரும். ஆனால், அந்த சாதனை மிகப் பெரிதாக அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால, வெற்றி பெற வேண்டும் என்ற அந்த எண்ணம் அவர்களை அடுத்தடுத்த கட்டங்களுக்கு கூட்டிச் செல்லும். அவர்களுடைய மனசுக்குள்ளே நாம் இன்னும் சாதிக்க வேண்டும் இன்னும் சாதித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்துக் கொண்டே இருக்குமே தவிரஇ சாதித்ததை ஒரு சாதனையாக நினைக்கவே மாட்டார்கள்.

இன்னும் பெரிதாக சாதிக்க வேண்டுமென்று நினைக்கிறவர்கள் இன்னும் அதிகமா உழைப்பார்கள். கடுமையாக உழைத்தத்தால்தான் அதிகமதிகமாய் சாதிக்க முடியும் என்பது ஒவ்வொரு சாதனையாளரக்கும் தெரியும். அந்த உழைப்பும், விடாமுயற்சியும்தான் அவர்களுக்கு ஊக்கத்தையும், உத்வேகத்தையும் தருகிற அருமருந்தாகிறது.

ஒரு நாள் ரோட்டோரமா வெற்றி உட்கார்ந்து இருந்துச்சு அந்த ரோட்டுல நடந்து போயிட்டு இருந்த தோல்வி, வெற்றியைப் பார்த்து, டேய் நண்பா என்னடா பண்ணிக்கிட்டு இருக்க என கேட்டுச்சாம்.அதற்கு வெற்றி, வாடா நான் சும்மாதான் உட்கார்ந்து இருக்கேன் என்று சொல்லுச்சாம். அதுக்கு தோல்வி சொல்லுச்சாம், உன்கென்னப்பா, நீ நல்லா ஜாலியா உட்கார்ந்து, போறது வர்றது எல்லாம் ரசிச்சுக்கிட்டு இருக்க. ஆனா என்னைய பாரு, எல்லாரும் என்னைய துரத்தித் துரத்தி விடுறாங்க. நான் ரோட்டில் அலெஞ்சிக்கிட்டிருக்கிறே என்று சொல்லி தோல்வி அழுதுச்சாம். அதுக்கு வெற்றி உன்ன ருசிக்காதவர்கள் யாருமே இருக்க முடியாது டா. உன்ன பார்த்ததுக்கப்பறம் தானே என்கிட்ட வருவார்கள். உன்ன தாண்டி தாண்டா அவுங்க என்னை பார்க்க முடியும். நீ ஏன் கவலைப்படுற இதெல்லாம் பெரிய விஷயமா? இந்த காலகட்டத்தில நிறைய பேரு உன்கிட்ட தான் வராங்க. ஏன்னா, தோல்விதான் நிறைய பேருக்கு நிரந்தரமாக இருக்கு.அந்தத் தோல்வியிலிருந்து விடுபடவேண்டும் என நினைக்கிறார்கள், நிறையபேர் சாதிக்கவேண்டுமென்றும் நினைக்கிறார்கள். ஆனா, என்ன உழைக்கவே மாட்டேங்குறாங்க. உழைப்பில், நிறையத் தடைகள் இருக்கு. அதிலேயே தடுக்கி தடுக்கி விழுந்துடறாங்க, அதனால, என்கிட்ட யாருமே வர மாட்டேங்கறாங்க. என்னய சந்திக்க மாட்டேங்குறாங்க. அதான் நான் போய் ஒரு ஓரமா உக்காந்து மத்தவங்க என்ன பண்றாங்கன்னு பாத்துக்கிட்டு இருக்கேன்.

அதுக்கு தோல்வி அப்படி என்னடா தடைகள்னு தோல்வி கேட்டது. அதற்கு வெற்றி உனக்குத் தெரியாதா? நீ செய்ற சூழ்ச்சியில் தானே எல்லாரும் மயங்கிப் போய் இருக்கிறார்கள்.

சின்னதா நான் ஒன்னே ஒன்னு சொல்றேன். இந்த யூடியூப் பார்த்துகிட்டே

இருக்காங்க. இந்தக்கால இளைஞர்கள் மட்டுமில்ல, சின்னஞ் சிறுசுகள் இருந்து எல்லாருமே அதுல தான் மனச வச்சிருக்காங்க. பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். என்ன கத்துக்குறாங்கன்னு தான் தெரியல. இப்படி அவங்க அந்த யூடியூப்ல பார்த்து பார்த்து குறிப்பா, அந்த ஷார்ட்ஸ் இருக்கு பாரு அத பாத்து பாத்து அவங்களுடைய வாழ்க்கையில 30 நொடி, 30 நொடின்னு சொல்லி இழந்துகிட்டே இருக்காங்க. அவங்க நினைக்கிறாங்க இது சின்ன ஒரு பொழுதுபோக்கு அல்லது கொஞ்ச நேரம் ரிலாக்சேஷன் தானே என்று. ஆனா, அதை பார்த்துப் பார்த்து அவர்களுடைய லைஃப்லையும் எல்லாமே 30 நொடிக்குள்ள நடந்தா அவர்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும் இல்ல. ஏன்னா வாழ்நாள் முழுக்க அவர்கள் சந்தோஷமா இருக்க நினைக்கிறார்கள். ஆனால், துக்கம் கொஞ்ச நேரம் இருந்தா போதுமுன்னு நினைக்கிறார்கள். அதனால, அவங்க மூளை மழுங்கி போயிடுது. அதையே திரும்ப திரும்ப பார்க்க ஆசைப்படுறாங்க. அதனால அவங்களுடைய மனதுக்கு அதிகபட்சமான அழுத்தம் ஏற்படுது.

அது மட்டும் இல்ல அவங்களால எதுலையும் முழுமையா கவனம் செலுத்த முடியறதில்ல. அவர்கள் வாழ்க்கையில் குறிக்கோளே இல்லாமல் வாழ்றாங்க. குறிப்பா ஜெயிக்கணும்னா நிறைய நேரம் உழைக்கணும். ஆனா உழைக்கிறதுக்கு பதிலா ஜாலியா இருக்க தான் விரும்புகிறார்கள். இதனாலே வெற்றி பெறாமல் சாதனை படைக்க முடியாமல், தோல்வியடைந்துகொண்டு இருக்காங்க. நீ தான் என்கிட்ட சொல்ற எல்லாரும் என்னை துரத்தி விடுகிறார்கள் நான் ரோட்டில் போறேன்னு. உண்மையா பாத்தா எல்லாரும் என்னைய விட உன்னை தான் நேசிக்கிறாங்க, உன்னை நோக்கித்தான் வராங்க. நிச்சயமா நீதான் சந்தோஷமா இருக்கிறாய் என்றதும். உடனே தோல்வி சொன்னது நான் இத பத்தி யோசிக்கவே இல்ல, பரவால்ல எல்லாத்தையும் நல்லா புரிஞ்சு வச்சிருக்க வெற்றி. சரி சரி எனக்கு வேலை நிறைய இருக்கு நான் அப்புறம் உன்னை பார்க்கிறேன் அப்படின்னு சொல்லிட்டு தோல்வி வெற்றியை விட்டுட்டு போயிடுச்சு.

என் அன்பார்ந்தவர்களே, இந்த கதை மாதிரி தானே நம்முடைய வாழ்க்கையிலும் இருக்கிறது. இக்கால சிறுவர்கள், இளைஞர்கள் எல்லோருமே இணைய தளத்திற்கும் இன்னும் யூடியூப் என்கிற சதிகாரர்களிடம் சிக்கிச் சின்னாபின்னமாகிறார்கள்.

இப்படி, சுலபமான வாழவேண்டும் என்று, இணையத்தில் சுற்றித் திரிந்து, வாழ்வை வீணாக்கிவிட்டு, எல்லாமே தோல்வி, வாழ்வது கடினம் என்று நாம் சொல்வது வேடிக்கையாக இருக்கு.

நான் இதற்காக சுத்தமா பார்க்க வேண்டாம் என்று சொல்லவில்லை. நமது தேவைகளுக்கு மட்டும் இந்த இணையதளங்களையும், குறிப்பாக லழரவரடிந சேனல் போன்றவற்றைப் பயன்படுத்தினோம். என்றால் நமக்கு நிச்சயம் நேரம் மிச்சமாயிருக்கும். அந்த நேரத்தில் பலவகையான விஷயங்களை கற்றுக்கொள்ள முடியும். மிகப்பெரிய சாதனைகளை படைக்க முடியும்.

இப்படி ஒவ்வொருவரும் உழைத்து மிகப்பெரிய சாதனையாளர்களாக வளர மனதார வாழ்த்துகிறேன். சாதிக்க நினைக்கும் மனதைத் தூண்டுவோம்இ சாதனை படைப்போம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி! (1கொரிந்தியர் 15:57)

மீண்டும் தொடர்வோம் அடுத்த மாதம்...

உங்கள் அன்பு சகோதரி,
செல்வி.ஜெனிட்டா ஆன்டோ.

நன்றி, வணக்கம்




# விடியல்



திருமதி.இலா.ஜெய தங்கம், பழநி

## நமக்கு எதிராக இருப்பவர் யார்?

இதற்குமேல் நாம் என்ன சொல்வோம்? கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்?– (உரோமையர் 8:31)

உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் உங்கள் அனைவருக்கும் எனது மகிழ்ச்சியான வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்குகின்றேன்...

கடவுள் தாம் முன்குறித்து வைத்தவரை அழைத்து, தமக்கு ஏற்புடையவராக்கி, மாட்சியில் பங்குபெற செய்கின்றார். கடவுளால் தேர்ந்து கொண்டவர்களுக்கு எதிராக யாராலும் குற்றம் சாட்ட இயலாது. அவர்களுக்கு தண்டனை தீர்ப்பளிக்கவும் முடியாது. ஏனெனில், இறந்து உயிருடன் எழுப்பப்பட்டு, கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்ற கிறிஸ்து இயேசுவே நமக்காக பரிந்து பேசுகிறார்.

கிறிஸ்து இயேசுவை நம் கண்முன் வைக்கும் போது, நேரிய உள்ளத்தோடு, ஒளியின் மக்களாய் நாம் பயணிக்கும் போது, நம் வாழ்வில் நாம் எதிர்கொள்ளுகின்ற வேதனை, நெருக்கடி, இன்னல், பட்டினி, ஆடையின்மை, இடர், சாவு என்று எத்தகைய கொடிய துன்பங்களால் நாம் வெட்டுவதற்கென ஒப்புவிக்கப்படுகின்ற ஆடுகளை போல் நிற்கின்ற சூழ்நிலையிலும், உன்னத தேவன் நம்முடன் இருக்கும் போது நமக்கு எதிராக பின்னப்படுகின்ற மலைப்போன்ற துன்பங்கள் பனி போல் மறையும்..

மனிதர்களே! கடவுளை எதிர்த்துப் பேச நீங்கள் யார்? உருவாக்கப்பட்ட பொருள் தன்னை உருவாக்கியவரிடம், ஏன் என்னை இவ்வாறு செய்தாய்? எனக் கேட்குமோ?– (உரோமையர் 9:19)

குயவன் ஒரே களிமண்ணை எடுத்து மதிப்புமிக்க கலன்களாகவோ, மதிப்பற்ற கலன்களாகவோ வனைப்பது அவருடைய விருப்பம்.

அதுபோல் கடவுள் தாம் விரும்புகின்ற மனிதர்களுக்கு இரக்கம் காட்டுவது, பரிவு காட்டுவது, தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துவது, தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவது, சினத்தை வெளிப்படுத்துவது அவருடைய விருப்பம்.

அதே வேளையில் அழிவுக்கும் சினத்திற்கும் இலக்கான மனிதர்களுக்கு, அவர் பொறுமை காட்ட விரும்பினால், யார் என்ன சொல்ல முடியும்? அவர்களை தமது இரக்கத்திற்குரிய மனிதர்களாக மாட்சி படுத்த விரும்பினால் கடவுள் மீது குற்றம் சுமத்த யாரால் முடியும்?

அவர்களுக்கு எதிராக நிற்பதால் என்ன பயன்? கடவுள் தாம் தீர்மானித்தபடியே அனைத்தையும் செய்கின்றார்.

ஒருவர் தனது விலை உயர்ந்த காரை வீட்டிற்கு முன்பாக வீதியில் நிறுத்திருந்தார். அந்த வழியாக சென்ற தெருநாய் ஒன்று அந்த காரின்மீது சிறுநீர் கழித்தது. கார் உரிமையாளர் அதை பார்த்து சிரித்தார். அவருடைய நண்பரோ பதறிப்போய் ஒரு கோடி ரூபாய் கார்ல அது சிறுநீர் கழிச்சிட்டு போகுது.. இதை பார்த்துவிட்டு எப்படி சார் உங்களால சிரிக்க முடியுது? என்றார். அதற்கு கார் உரிமையாளர் அமைதியாக நாய்குட்டி தன் அறிவுக்கு எட்டியதை செய்கிறது. அதற்கு இந்த காரினுடைய மதிப்பு தெரியாது. அதற்கு எடுத்து சொன்னாலும் புரியாது. இதற்காக ஏன் நாம் தேவையில்லாமல் பதற வேண்டும். கவலைப்பட வேண்டும். சிறிய புன்னகையோடு கடந்து செல்லலாமே என்றார்.

இனியவர்களே.. நம் மதிப்பை அறியாதவர்கள் நம்மை அவமானப்படுத்தினாலும், கேலி செய்தாலும் நம் வாழ்வில் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் நாம் விளக்கம் அளித்து கொண்டு, விவாதம் செய்து கொண்டு மன நிம்மதியை இழக்காமல், உயிர்த்த கிறிஸ்து இயேசுவை பற்றிக் கொண்டு, துணிவுமிக்க உள்ளதோடு, கிறிஸ்துவின் சீடர்களாய் இந்த அவனியில் பயணிப்போம்.

ஏனெனில், அவர் மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்.
–(உரோமையர் 10:11)

நாம் ஒருமனத் தவராய், ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருப்போம். இறையாட்சி நம்மில் மலரட்டும். ஆமென்.



# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 91

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

## குறள் விளக்கம்

ஒருவர் வாயிலிருந்துவரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும்,வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்

## சிந்தனை

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே என்று சொல்வார்கள் பிறக்கும்பொழுது எல்லோரும் நல்லவர்களாகவே இருக்கின்றார்கள். கடவுளுக்கு உகந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்தச் சமுதாயத்தில் வளர வளரத்தான் கண்ணாடியில் தூசு படிவதுபோன்று அல்லது ஒரு தண்ணீர் நிரம்பிய தொட்டியில் பாசி படிவதைபோன்று மனித உள்ளமும் பல்வேறு குறைபாடுகளால் நிரம்பிவிடுகிறது. நல்லது செய்வதைத் தவிர்த்து நல்லது பேசுவதைத் தவிர்த்து அல்லவை பேசி அழுக்கடைகின்றது.

எனவே இந்தச் சூழலில் ஒரு மனது நல்லது செய்து நல்லதேப் பேசவேண்டுமென்றால் அவன் மெய்பொருள் கண்டவனாகத்தான் இருக்கவேண்டும். இறைவனோடு ஐக்கியம் உள்ளவனாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அவனால் நல்லதைச் சொல்லவும் நல்லதைச் செய்யவும் முடியும். வஞ்சனையற்ற அன்புள்ள வார்த்தைகள்தான் இன்சொல்லுக்கு இலக்கணம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இறைத்துணையின்றி ஓர் அன்பான சொல்லை ஒருவர் சொல்லமுடியாது.

வேதாகமத்தில் பவுலடியாரும், தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறுஎவரும் 'இயேசுவே ஆண்டவர்' எனச் சொல்லமுடியாது என்று1 கொரி 12:3ல் குறிப்பிடுவார். அதுபோன்று இந்தச் சமுதாயத்தில் நல்லதை பேசுவதற்கும் செய்வதற்கும் இறைஉதவி நிச்சயம் இருக்கவேண்டும். நல்ல மரம் நல்லகனி கொடுக்கும்: தீயமரம் தீயகனி கொடுக்கும் என்று மத்தேயு நற்செய்தி 7ம் அதிகாரத்தில் இயேசு குறிப்பிடுகின்றார். நல்லவர்கள் நற்கருவூலத்திலிருந்து நல்லதை வழங்குவார்கள் தீயவர்கள் தீயகருவூலத்திலிருந்து தீயதைதான் இச்சமுதாயத்திற்கு வழங்குவார்கள். எனவே நல்லவர்களாய் இருப்போம். நல்லவர்களாய் இருப்பதற்கு இறைவனின் உதவியை நாடுவோம்.